பக்கங்கள்:11

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை 04.01.2022 கதிர் 60

### இது ரகசியம் அல்ல!

'தானம் கிடைத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்காதே' என்ற பேச்சு மொழி நம்மிடையே உண்டு. ஆனால் எப்போது நாம் அப்படி நடக்கின்றோம்? ஓஸியில் கிடைப்பது கூட ஒரிஜினல்தானா என்று ஒன்றுக்கு இரண்டு தடவை பக்கம்02

# அரச ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு

- சமுர்த்திப் பயனாளிகளுக்கும் ஆயிரம் ரூபா உயர்வு
- அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி நீக்கம்

அரச சேவையாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் விசேட தேவையுடைய பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு இந்த மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

சமுர்த்திப் பயனாளர்களுக்கு இந்த மாதம் முதல் ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள் 02



## தனியார் துறையினருக்கும் மேலதிக கொடுப்பனவுக்கு முதலாளிகளுடன் கலந்துரையாட அமைச்சரவை பணிப்பு



தனியார் துறை ஊழியர்களுக்கு மாதாந்த மேலதிக கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் தனியார் துறை முதலாளிகளுடன் கலந்துரையாடுமாறு நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தொழில் துறை அமைச்சருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது என்று தொழில் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நேற்று தொழில் துறை அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு 02


## யாழ். குருநகரில் கத்திக்குத்து; மூவர் அவசர சிகிச்சைப் பிரிவில்

(ந.லோகதயாளன்)

யாழ்., குருநகர் பகுதியில் நேற்றிரவு கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் 02

## வவுனியாவில் நேற்று காஸ் அடுப்பு வெடிப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் வீடு ஒன்றில் சமைத்துக் கொண்டு இருந்தபோது காஸ் அடுப்பு வெடித்துள்ளது என 02

## பரந்தனில் இளைஞர் படுகொலை: சாவுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், பரந்தன் சந்திப் பகுதியில் இடம்பெற்ற வன்முறையில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இளைஞரின் படுகொலைக்கு நீதி கோரி அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பரந்தன் சந்தியில் புத்தாண்டு தினத்தில் குணரட்னம் கார்த்தீபன் என்னும் 24 வயதுடைய இளைஞர் படுகொலை செய்யப்பட்டார். அத்துடன் மேலுமொருவர் படுகாயமடைந்தார்.

போத்தலால் குத்தியதன் காரணமாக இளைஞர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் எவருமே கைதுசெய்யப்படவில்லை என உறவுகள் ஆதங்கம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், உயிரிழந்த இளைஞரின் இறுதிக் 02

## யாழ். போதனா பணிப்பாளராக நந்தகுமாரன்

யாழ்ப்பாணம், ஜன.04

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்குப் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படும் வரை அந்தப் பொறுப்பைக் கையாளும்படி வடக்கு மாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.நந்தகுமா ரன் பணிக்கப் 10

## யாழ். வளைவுக்கு அருகில் விபத்து!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ். வளைவுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

நல்லூர் - செம்மணி வீதி 10

## மருத்துவக் கழிவுகளை எரியூட்டிய நிர்வாகிக்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்றம்

### கட்டத் தவறின் ஒரு மாதம் சிறைத் தண்டனை



(ந.லோகதயாளன்)

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள காணியில் மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளைக் கொட்டி எரியூட்டிய தனியார் வைத்தியசாலையின் உரிமையாளருக்கு 7 குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றம் 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் வித்தித்துள்ளது. 10

## பட்டத் திருவிழாவை உடன் ஒத்திவைக்கவும்!

### இல்லையேல் நீதிமன்றை நாடி தடுப்போம் என்று சிவாஜி எச்சரிக்கை

(இ.கலையமுதன்)



பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி பங்கேற்கும் வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவை, கொரோனா, ஒமிக்ரோன் பரவி வரும் தற்கால சூழ்நிலையில் காலவரை 10

## இனி இது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'செக்' பண்ணிப் பார்ப்பது நமது பரவணிப் பழக்கம் அல்லவா?

அப்படிப்பட்ட ஒரு விடயம் பற்றிய தகவல் இது.

வேறு ஆதாயங்கள் எதிர்பார்க்காமல் நேர்மையாகப் பணிபுரியும் ஊடகவிய லாளர்களைக் கூட வீழ்த்தும் ஒரு புள்ளி இருக்கின்றது. அது, வருட இறுதியில் வழங்கப்படும் டயறி, கலண்டர், ஹம்பர்ஸ் பொதிகள் என்பன.

பல பத்திரிகையாளர்கள் – குறிப்பாகச் செய்தியாளர்கள் – டயறிகளை எதிர்பார்ப்பார்கள். அப்படி தேடித் தங்களுக்கு டயறி அன்பளிப்பது தங்களுக்கு அளிக்கப் படும் ஒரு கௌரவம் என்று கருதும் பத்தி ரிகையாளர்களும் உண்டு. நான் டயறி பாவிப்பவனல்லன். ஆனால் வருட முடிவிலோ, ஆரம்பத்திலோ கிட்டும் ஒரு சில டயறிகளை என் செய்தியாளர்களிடம் கொடுத்தது விடுவேன்.

ஒரு காலத்தில் இந்த டயறி, கலண் டர்களை நாங்களே வாங்கி, அதிகாரி கள், முக்கிய பிரமுகர்கள் என்று எங்கள் செய்தி மூலங்களுக்கு வழங்கி, அன்ப ளித்து, அவர்களைக் கையில் போடும் ஒரு வழக்கமும் இருந்தது. பத்திரிகை அலுவலகங்களில் இந்த விடயங்களைக் கவனிக்கவென தனியான குழு ஒன்று வருட இறுதியில் சுறுசுறுப்பாக இயங்கும். அக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அமைய செலவு மீட்டரும் வேகமாக ஓடும்.

அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. 'ஸ்மார்ட் போன்' பாவிப்பதால் கலண்டர், டயறி தேவையும் குறைந்து விட்டது போலும்.

மின்னஞ்சல் முறைமை வந்ததால் தபால் சேவை படுத்துவிட்டாலும், அது தொடர்ந்தும் இயங்குகின்றது. அது போலத்தான் கலண்டர், டயறி விவகாரமும். இன்னும் சில காலத்துக்கு அது பயன்பாட்டில் இருக்கும்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

இராணுவத் தளபதியின் பெயரில் இலங்கை இராணுவத்தினர் நாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு கலண்டர், டயறி அனுப்பி வைத்திருக்கின்றனர். அதில் கலண்டரில் உள்ள ஒரு குறிப்பு குறித்து ஒரு சர்ச்சை உள்ளது. அரசியல் தலைமையின் பணியை இராணுவம் எடுக்கும் மாதிரியான தொனி அதில் உள்ளது. (அது குறித்து இன்றைய நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் பிரஸ்தாபிக் கப்பட்டிருக்கின்றது. பார்த்தறிக.)

அந்தக் கலண்டர் சர்ச்சை குறித்து தென்னிலங்கை எதிரணி எம்.பி. ஒருவருடன் நேற்றிரவு பேசிக் கொண்டிருந்தேன்.

"இராணுவத்தினரின் கலண்டர், டயறி உங்களுக்குக் கிடைத்ததா?" என்று கேட்டார் அவர்.

"ஆம். யாழ்ப்பாணத்தில் என் அலுவலகத்திலும், கொழும்பில் என் வீட்டிலும் அவை விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கலண்டரைப் பார்த்த பின்னர் தான் அது குறித்து உங்களுடன் பேசுகின்றேன்." என்றேன்.

"அப்படியா? அந்த டயறியை எங்களில் பலர் – குறிப்பாக எதிரணி எம். பிமார் – தமது சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்த விரும்புவதில்லை. அந்தப் பரிந்துரையை உங்களுக்கும் தருகிறேன்." என்றார்.

"ஏன்? அதில் என்ன பிரச்சினை?" என்று கேட்டேன்.

"மிக உயர்ந்த ரகத்தில் – தரத்தில் – அது அச்சிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேகமாகப் பிரமுகர்களின் பாவனைக்கு என்றே அது செய்யப்பட்டுள்ளது. அவசரமாக போன் சார்ஜ் இறங்கினால் பயன்படுத்துவதற்கு 'Power - Pack' கடைசி அட்டையில் உள்ளது. பார்த்தீர்களா?" – என்று கேட்டார்.

"இல்லை. நான் அதை அவதானிக்கவில்லை" என்றேன்.

"இப்போதெல்லாம் மிக நுணுக்கமான Tracking Device (கண்காணிப்புச் சாதனம்) இத்தகைய மின்னியல் பாகங்களில் பகுதியாகப் பொருத்தப்படலாம். மிக நுண்ணியவை என்பதால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாது. தரமான, உயர்ந்த ரக டயறி என்றால் நிச்சயம் பிரமுகர் தங்களுடன் கொண்டு திரிந்து பயன்படுத்தவார்கள். எந்தப் புற்றில், எந்தப் பாம்பு, எந்த வடிவத்தில் இருக்குமோ தெரியாது. ஏன் வீண் வம்பு? அந்த 'Power - Pack' இற்குள்ளேயே எல்லா நடவடிக்கைகளையும் வேவு பார்த்துக் கண்காணிக்கும் – ஒட்டுக் கேட்கும் – நகர்வுகளை வெளிப்படுத்தும் – வசதியுடைய நுண்ணிய கருவிகள் இருக்குமோ, என்னவோ?" என்று ஒரு சர்ச்சையைக் கிளப்பினார் அவர்.

நான் அவருக்கு 'ஸ்மார்ட்' ஆகப் பதில் சொன்னேன்.

"நான் 'டயறி' பயன்படுத்துவது குறைவு. அலுவலகத்தில்தான் பொது நிகழ்வுகள் பற்றிய 'அசைண்ட்மெண்ட்' டயறி இருக்கும். அப்படி நான் டயறி பயன்படுத்துவதாக இருந்தாலும் இந்த டயறியைப் பயன்படுத்தப் பின் நிற்க மாட்டேன். ஏன் என்றால் என்னிடம் ஒளிவு, மறைவு, கரவு ஏதும் இல்லை. அதனால் அத்தகைய சந்தேகத்துக்குரிய டயறியை பயன்படுத்த எனக்குப் பயம் ஏதும் கிடையாது." என்று 'பீலா' விட்டேன் – நான்தான் டயறியே பயன்படுத்தப் போவதில்லை என்ற துணிச்சலில்.

இப்போது கூறுங்கள் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'தானம் கிடைத்த மாட்டின் பல்லை பதம் பார்க்கக் கூடாது' என்ற கருத்து, அன்பளிப்பாகக் கிடைத்த இந்த டயறியின், விடயத்தில் கனகச்சிதமாகப் பொருந்துகின்றதுதானே?

✣ ✣ ✣

ஊடகங்களின் அலப்பறை சில சமயங்களில் தாங்க முடியாததாகத்தான் இருக்கின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதோ பதவி விலகுகின்றார், அதோ ஓய்வு பெறுகின்றார் என்று தினசரி போட்டுப் பிய்த்துப் பிடுங்கின ஊடகங்கள்.

கடந்த வாரத்தில் அந்தச் செய்திகள் தவறு, அப்படி எண்ணம் ஏதும் பிரதமருக்குக் கிடையாது என்பதை உரிய தரப்பிடம் கேட்டு விசாரித்து மிக உறுதியாக இப்பதியில் குறிப்பிட்டிருந்தேன். (I got it straight from horse's mouth)

ஆனால் நேற்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று திரும்பவும் பிரதமர் பதவி விலகுகின்றார் என்று செய்தியை தலைப்பில் பிரசுரிக்க, கடைசியாக பிரதமர் சார்பில் அவரின் அலுவலகமே மறுப்பு அனுப்ப வேண்டியதாயிற்று.

அந்த மனுசனைப் பதவியில் இருந்து கிளப்பிவிட்டுத்தான் ஊடகங்கள் அடங்கும் போல...!

**- மின்னல் -**

## அரச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கான சகல வரிகளும் நீக்கப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டத் துறைசார் குடும்பங்களுக்கு மாதாந்தம் ஒரு கிலோ கிராம் கோதுமை மா 80 ரூபா என்ற அடிப்படையில் 40 ரூபா நிவாரணத்துடன் 15 கிலோகிராம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 20 பேர்ச்சர்ஸ்க்கும் குறைவான விவசாய நிலங்களைக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் கலந்துரையாடப்படுகின்றது என்றும் நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தனியார் துறையினருக்கான மாதாந்த மேலதிக கொடுப்பனவு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார்களுடன் அமைச்சு தற்போது கலந்துரையாடி வருகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பரந்தனில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிரியை நேற்று நடைபெற்றது. நேற்றுக் காலையே வைத்தியசாலையில் இருந்தும் உடல் வீட்டுக்கு எடுத்துவரப்பட்டபோது பரந்தன் சந்தியில் இளைஞரின் படுகொலைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது.

## யாழ். குருநகரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடிந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வைரவபுளியங்குளம், ரயில் வீதி, மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்தபோது நேற்று மதியம் திடீரென காஸ் அடுப்பு வெடித்துள்ளது.





இதையடுத்து குறித்த பெண் காஸ் சிலிண்டரைப் பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதைத் தடுத்துள்ளார். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியாப் பொலிஸார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (100)











## புணானையில் மக்கள் கவனவீர்ப்பு:

# வியாழேந்திரனின் வாக்குறுதியையடுத்து கலைந்து சென்ற போராட்டக் காரர்கள்!

மட்டக்களப்பு, ஜன. 04

மட்டக்களப்பு, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகத்திற்குட்பட்ட புணானை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவை இணைப்பது தொடர்பான விடயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை பிரதேச மக்கள் வீதியில் இறங்கி கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ், சிங்களம் என இரு தரப்பு மக்களும் இணைந்து இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

தாங்கள் வழக்கமாக கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் தங்களது அரச நிர்வாக நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், தற்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் நிர்வாக நடவடிக்கைக்குள் திடீரென தங்கள் கிராமம் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தங்களுக்குக் கவலையளிப்பதாகத் தெரிவித்தே கவனவீர்ப்பு போராட்டத்தில் பிரதேச மக்கள் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இருந்து காணி தொடர்பான எல்லை நிர்ணயக் குழுவொன்று ஞாயிறு காலை புணானை பிரதேசத்துக்குச் சென்று எல்லை நிர்ணயம் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக அறிந்த பிரதேச மக்கள் அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மேற்படி விடயம் தொடர்பாக இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன், போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாக சென்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தாங்கள் வாகரை பிரதேச செயலகத்துடன் இணைந்தே வாழப்போவதாகவும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைந்து வாழ விருப்பமில்லை எனவும் இதனைத் தடுத்துநிறுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் -

இந்த விடயம் தொடர்பாக தன்னால் இயன்ற உதவிகளை மேற்கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹபிஸ் நஷிர் அஹமட் தெரிவிக்கும் காணி தொடர்பான புள்ளி விவர நடவடிக்கைகளைத் தாம் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

வாகரை பிரதேச செயலகம், கிரான் பிரதேச செயலகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இஸ்லாமிய சகோதரர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனவும், மக்களுக்கிடையில் இன முரண்பாட்டை ஏற்பாடுத்தும் நடவடிக்கையில் எவரும் ஈடுபடக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் வாக்குறுதியை தொடர்ந்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் வீடு உடைப்பு திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது!

மட்டக்களப்பு, காத்தான்குடி பகுதியில் வீடு உடைத்து 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு லட்சம் ரூபா பணத்தை திருடிச் சென்ற திருடர்கள் தங்க ஆபரணங்களை நகைக்கடையில் விற்பனை செய்ய முற்பட்டபோது கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி இரவு காத்தான்குடி மீன்பிடி திணைக்கள வீதியிலுள்ள வீடு ஒன்றின் மலசலகூட கூரையை உடைத்து உள்நுழைந்து அலுமாரியில் இருந்த 12 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு லட்சம் ரூபா பணத்தை திருடிச்; சென்றுள்ளனர்.

இதனையடுத்து தங்க ஆபரணங்களைத் திருட்டு கொடுத்தவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வை.விஜயராஜா தலைமையிலான பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அக்கரைப்பற்றில் திருமணம் முடித்துள்ள காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் அக்கரைப்பற்று நகைக்கடை ஒன்றில் டொலர் எனப்படும் தங்க ஆபரணம் ஒன்றை விற்பனை செய்ய சென்றுள்ள நிலையில் நகைக்கடை உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் ஒன்றை வழங்கியதையடுத்து பொலிஸார் குறித்த தங்க ஆபரணத்தை விற்பனை செய்ய சென்றவரை மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர்.

பின்னர் பொலிஸார் நடத்திய விசாரணையில் காத்தான்குடியில் உள்ள வீடு ஒன்றில் திருடியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்டவருடன் திருட்டில் ஈடுபட்ட 25 வயதுடைய ஒருவரை காத்தான்குடியில் வைத்து பொலிஸார் கைது செய்ததையடுத்து இருவரிடமிருந்தும் 6 பவுண் தங்க ஆபரணங்களை இதுவரை மீட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் பிராந்தியக் காரியாலயம் திருகோணமலையில்!

வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் பிராந்திய காரியாலயம் ஒன்று திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளது.

அதாவது வெளிநாடுகளுக்கு செல்ல வீசா அனுமதியைப் பெறும்பொருட்டு தூதரகங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் வெளிநாட்டு அமைச்சில் சான்றுறுதிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை திருகோணமலையில் அமைந்துள்ள அலுவலகத்தில் செய்துகொள்ள முடியும்.

அதாவது பேச்சு வழக்கில் 'Foreign Ministry seal அடித்தல்' என்று சொல்லப்படும் ஆவண சான்று உறுதிப்படுத்தல், வெளிநாடுகளில் நிர்க்கதியான நிலையில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு மீள அழைத்து வரல், வெளிநாடுகளில் இறந்தவர்களின் உடல்களைக் கொண்டுவருதல், வெளிநாடு ஒன்றில் இருந்து வரவேண்டிய நஷ்டஈடு மற்றும் பெறுவனவுகளைப் பெறல் போன்ற சேவைகளை இங்கு பெற்றுக்கொள்ள முடியும். கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்துக்கு செல்லவேண்டிய அவசியமில்லை. அனைத்து விடயங்களையும் திருகோணமலை அலுவலகத்தில் நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF ENGINEERING**
**WALK-IN- INTERVIEW**

Walk in interview for Temporary Instructors in the following displines will be held on 11.01.2022 from 10.00 am to 12.00 noon at the board room, Faculty of Engineering, University of Jaffna, Arviyal Nagar, Kilinochchi:

1. Mechanical & Process Engineering
2. Engineering Mathematics
3. Civil Engineering
4. Electrical and Electronic Engineering
5. Computer Engineering

**Required qualifications**

* A UGC recognized Four Years Engineering Degree for the above position.
* Candidates who are awaiting the results of the final degree examinations may also apply.

**Salary: Rs. 40,920/- per month (fixed)**

Candidates are requested to appear with relevant certificates, NIC and self-prepared applications (Curriculum Vitae)

Registrar
03.01.2022

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இராணுவ ஆட்சிக்குக் கட்டியம்

**பொருளாதார ஸ்திரமின்மையாலும் கொவிட் தொற்று நெருக்கடியாலும் விழி பிதுங்கி நிற்கின்றது நாடு.**

**ஜனாதிபதி கோட்டாபயவின் இராணுவப்பாணி ஆட்சி முறை யால் நாடு கெட்டுக் குட்டிச்சுவராகி, இப்படிச் சிக்கிச் சீரழிவில் நிற்கிறது என்பதை மக்கள் எல்லோருமே உணரும் நிலைமை வந்திருக்கின்றது.**

**நாட்டின் சிவில் நிர்வாக விடயங்களில் கோட்டாபய ராஜபக்ஷவின் இராணுவம் அதீத தலையீடு செய்யும் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக ஸ்திரமடைந்து வருகின்றது.**

**முதலில் வடக்கு கிழக்குத்தான் – தமிழர் தாயகப் பகுதி தான் – முழு இராணுவ மயப்படுத்தலில் சிக்கிக் கிடந்தது. இன்று வரை அதற்கு எதிராகத் தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பி வருகின்றார்கள். இந்த அநீதிக்கு எதிராக – அடக்குமுறைக்கு எதிராக – தமிழர் களுக்கு ஆதரவாக – குரல் எழுப்ப மறுத்த சிங்களம், தமிழர் தேசம் சிங்கள இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் சிக்கியிருப்பதை சந்தோசத்துடன் வேடிக்கை பார்த்தது.**

**தமிழர் தேசத்தில் தனது ஆக்கிரமிப்பைப் பரீட்சித்து – சோதித்து – பார்த்த இராணுவப்பாணி ஆட்சியாளர்கள், அந்தப் போக்கை மெல்ல சிங்களத்திலும் கட்டவிழ்த்து விடத் தொடங்கினர்.**

**முன்னாள் படையதிகாரியான கோட்டாபய ராஜபக்ஷ வேறு எந்தத் தேர்தல்களிலோ, அரசியலிலோ ஈடுபடாமல் நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் குதித்து, பௌத்த – சிங்களப் பேரினவாதத்தை வெறியைத் தூண்டி, அதன் மூலம் நேரடி யாக ஜனாதிபதிக் கதிரைக்கு வந்ததும், தமிழர் தாயகத்தை இராணுவ இரும்புப்பிடிக்குள் வைத்திருக்கும் முறைமையை மெல்ல தெற்கின் பக்கத்திற்கும் சிங்கள தேசத்தின் மீதும் – திருப்பி விட்டார்.**

**முக்கிய உயர் சிவில் நிர்வாகப் பதவிகள் எல்லாம் வழமைக்கு மாறாக முன்னாள் படை அதிகாரிகள் வசமாகின.**

**உலகையே உலுப்பும் கொவிட் தொற்றுப் பேரிடரை எதிர் கொள்ளும் இலங்கையின் தேசிய செயலணிக்குத் தலைமை வகிக்கும் பொறுப்புக் கூட இராணுவத் தளபதியிடம் சென்றது. இந்த விடயங்களில் அவரின் வழிகாட்டுதல்களைப் பெற வேண்டிய நிலைமை அமைச்சர்களுக்கு.**

**இராணுவப் பங்களிப்பின் – தலையீட்டின் – உச்சத்தை, இராணுவத் தளபதி 2022 ஆம் ஆண்டை ஒட்டி வெளியிட்ட இராணுவக் கலண்டர் எடுத்தியம்பி நிற்கின்றது.**

**இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உரைத்த வாசகங்களுடன் அவரது படமும் இந்தக் கலண்டரில் இடம் பெற்றுள்ளது.**

**அதில் ஒரு வாசகம் “இலங்கை இராணுவம் சுபீட்சமான நிலையான தேசத்தை அபிவிருத்தி செய்து பேணுவதற்கு (பராமரிப்பதற்கு)திறன் கொண்டது” – என்று அவர் கூறுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இராணுவத்தின் பணி, நாட்டின் தேசிய பாதுகாப்பு. தேவைப்படும் சமயங்களில் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கும் பேரிடர் நெருக்கடிகளை எதிர்கொள்ளவும் உதவுவது.**

**அதை விடுத்து சுபீட்சமான நாட்டை உருவாக்குவது, பேண்தகு நிலையில் – நிலையான –தேசத்தைப் பராமரிப்பது போன்றவை அரசியல் தலைமைக்கு உரிய வேலை. அரசியல் தலைமைத்துவத்தின் பணியை இராணுவம் ஆற்ற முடியும் என்று இராணுவத் தளபதியே தமது வாசகமாகப் பொறித்து கலண்டரில் அச்சிட்டு விநியோகிப்பது என்பது ஜனநாயக ஆட்சி முறைமை மீறலுக்கான மிக உச்சப்பட்சத் தயாரிப்பு நடவடிக்கையாகும்.**

**ஜனநாயகத்திலும் சட்டத்தின் ஆட்சியிலும் கரிசனை கொண்ட தரப்புகள் விரைந்து கவனம் எடுக்க வேண்டிய விடயம் இது.**

**ஜனநாயக ஆட்சி முறைமைக்கு எதிரான முதலாவது அபாய சமிக்ஞையாக இது கொள்ளப்ப. வேண்டும்.**

## பெற்றோல் மற்றும் டீசலை ஏற்றிய இரு கப்பல்கள் கடலில் காத்திருப்பு

### இறக்குவதற்கு டொலர் இல்லை

பெற்றோல் மற்றும் டீசலை ஏற்றி வந்த இரண்டு கப்பல்கள் சில தினங்களாக ஏற்றி வந்த பொருள்களை இறக்காமல் கடலில் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன என ஐக்கிய ஒருங்கிணைந்த தொழிற்சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.


40 ஆயிரம் மொற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பல் கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கைக்கு வந்தது. டீசலின் மாதிரியும் எடுக்கப்பட்டு விட்டது. 7 தினங்கள் கடந்து விட்டன. இன்னும் டீசலை இறக்க முடியவில்லை. 40 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலை ஏற்றிய கப்பல், டிசெம்பர் 28 ஆம் திகதி கொழும்பு வந்தது.

அதிலும் மாதிரிகள் எடுக்கப்பட்டு, அனைத்தும் முடிந்துள்ளன. 7 நாள்களாக அதில் இருக்கும் பெற்றோலை இறக்க முடியவில்லை. இந்தக் கப்பல்களுக்கு 52 மில்லியன் டொலர்களை செலுத்தி, அவற்றில் இருக்கும் பெற்றோல் மற்றும் டீசலை இறக்க வேண்டும்.

பணத்தைச் செலுத்த முடியாத நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. தயவு செய்து 52 மில்லியன் டொலர்களை செலுத்தி, இலங்கை வந்துள்ள இந்த எரிபொருள்களை இறக்குங்கள்.

இந்த இரண்டு கப்பல்களில் இருக்கும் எரிபொருளை உடனடியாக இறக்கவில்லை என்றால், நாட்டில் எரிபொருள்களுக்கான பெரும் நெருக்கடி ஏற்படும் எனவும் ஆனந்த பாலித குறிப்பிட்டுள்ளார்.

## பொருள் கொள்வனவுக்கு வரிசையில் நிற்க விடுமுறைக்கு விண்ணப்பித்த அரச ஊழியர்!




இலங்கை முழுவதும் சமையல் எரிவாயு, பால் மா மற்றும் மண் எண்ணெய் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசைகளில் நிற்கும் நிலைமை காணப்படுகிறது.

இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் மணிக்கணக்கில் வரிசைகளில் நிற்கின்றமையை பெரும்பாலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வரிசையில் நிற்கும் மக்களில் சிலர் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு ரீதியான விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றனர். இவ்வாறு பொருள்களைக் கொள்வனவு செய்ய வரிசையில் நிற்கும் நபர்கள் மத்தியில் அரச மற்றும் தனியார் துறையினர் என்ற வித்தியாசத்தையும் காணமுடியவில்லை.

இந்த நிலையில் அண்மையில் ஒரு நாள் அரச நிறுவனம் ஒன்றின் ஊழியர் பால் மா மற்றும் எரிவாயு வரிசையில் நிற்பதற்காக தனது நிறுவனத்தில் விடுமுறை கோரி சமர்ப்பித்திருந்த விண்ணப்பம் ஒன்றின் புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

அந்த ஊழியர் விடுமுறைக்கான காரணம் கேட்கப்பட்டுள்ள பகுதியில் 'எரிவாயு மற்றும் பால் மா வரிசையில் நிற்பதற்காக' என்று குறிப்பிட்டுள்ளார்.

## மண்ணெண்ணெய்க்கு மாற்றாக விமான எரிபொருள் இறக்குமதி!

### செய்யத் திட்டம் என்கிறது எரிசக்தி அமைச்சகம்

மண்ணெண்ணெய்க்கு மாற்றாக விமான எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.ஆர். ஓல்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய மண்ணெண்ணெய் தேவையை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாகப் பூர்த்தி செய்து வருவதாகவும் எனினும், தேவையான தொகையை வழங்க முடியாது என நிரூபிக்கப்பட்டால், விமான எரிபொருளை உள்ளபடியே நாட்டுக்கு இறக்குமதி செய்யவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் இடையே பெரிய வித்தியாசம் இல்லை. இலங்கை கடந்த பல மாதங்களாக விமான எரிபொருளை இறக்குமதி செய்து வருவதாகத் தெரிவித்த அமைச்சின் செயலாளர், விமான எரிபொருள் இயற்கையில் நிறமற்றதாக இருந்தாலும், நாட்டின் மண்ணெண்ணெய்த் தேவையைப் பூர்த்தி செய்ய அதனைப் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கையிருப்பு இல்லாததால் கச்சா எண்ணெயைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்; மூடப்படும் என அமைச்சு 30 டிசெம்பர் 2021 அன்று அறிவித்தது.

எவ்வாறாயினும், நீண்டகால சிங்கப்பூர் ஒப்பந்தக்காரரிடமிருந்து விநியோகம் ஜனவரி 26 ஆம் திகதி தொடங்கும் என்பதால், சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் செயற்படத் தொடங்கும் என்று அமைச்சகம் அறிவித்துள்ளது,

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அமைச்சு உறுதியளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை மிரளவைக்கும் பச்சைமிளகாயின் விலை!

நாடளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் பொது மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அந்த வகையில் கம்பஹா மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1000 ரூபா முதல் 1500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மரக்கறிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு விலை உயர்ந்துள்ளதாகவும், தமக்கு ஏற்றவாறு தன்னிச்சையாக மரக்கறிகளுக்கான விலைகயை வியாபாரிகள் நிர்ணயிக்க முயற்சிக்கின்றனர் எனவும் நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா விபத்தில் மரணித்த இளைஞருக்கு அரசியல் தலையீடின்றி நீதி கிடைக்க ஏற்பாடு!

## திலீபன் எம்.பி. உத்தரவாதம்



வவுனியா விபத்தில் மரணித்த இளைஞருக்கு அரசியல் தலையீடின்றி நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸாரிடம் வலியுறுத்தியுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்,மாவட்டஅபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

விபத்து விசாரணை தொடர்பில் பொலிஸாருடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில்பிக்கப் வாகனம் ஒன்றும், ஓட்டோஒன்றும்மோதிவிபத்துக்குள்ளானதில் எமது மாவட்டதைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

குறித்த விபத்தையடுத்து அப்பகுதியில் மரணித்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் போராட்டம் மேற்கொண்டனர். இதன் போது பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வருகைதந்து நிலமையைக் கட்டுப்படுத்த முயன்ற போது பதற்ற நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் எனது கவனத்துக்கு வந்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்றுநிலமையைசீர்செய்திருந்ததுடன், பாதிக்கப்பட்ட இளைஞருக்கு நீதி கிடைக்கும் என உறுதி மொழியையும் அவரது குடும்பத்தினரிடம் வழங்கி இருந்தேன்.

இது தொடர்பில் நான் வவுனியா பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற அடிப்படையில் வலியுறுத்தியுள்ளேன். விபத்துக்குள்ளான பிக்கப் வாகனம் அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றுக்கு உரியது என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்திருந்தனர். இதனால், எந்தவித அரசியல் தலையீடும் இன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க பொலிஸார் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என நான் வலியுறுத்தியுள்ளேன். அத்துடன், வவுனியா தாண்டிக்குளம், இராணுவ உணவகத்துக்கும், சாந்தசோலைப் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏ9 வீதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளதுடன், அடிக்கடி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இதனால் அப்பகுதியில் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வீதிக்குறியீடுகள், வேகக்கட்டுப்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதுடன், பொலிஸாரையும் கடமையில் ஈடுபடுத்துமாறும் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன். விரைவில் அந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மிகவும் அரிய வகை விலங்கு கண்டுபிடிப்பு

கொலன்ன கோப்பன்கந்த பிரதேசத்தில் பொறியொன்றில் சிக்கிய நிலையில் மிகவும் அரிய வகையிலான வெள்ளை முள்ளம்பன்றியொன்று காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

எம்.பியதிஸ்ஸ என்பவரின் வீட்டுக்கு அருகில் காணப்பட்ட பொறியொன்றில் சிக்கியிருந்த இந்த முள்ளம்பன்றி தொடர்பில் அவர் உடவலவ வனவிலங்கு காரியாலயத்துக்கு அறிவித்துள்ளார்.

உடன் விரைந்த அதிகாரிகள் முள்ளம்பன்றியைப் பாதுகாப்பாக மீட்டு, அதற்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

இவ்வாறான முள்ளம்பன்றிகள் மிகவும் அரிதானவை எனவும், பொறியில் சிக்கியதால் படுகாயமடைந்துள்ளதாகவும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வனவிலங்கு திணைக்கள அதிகாரி விஜித பெரேரா தெரிவித்துள்ளார்.

அல்பினோ முள்ளம்பன்றிக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு நினைவஞ்சலி!

2006 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் 16 ஆவது நினைவஞ்சலி தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக காந்தி சிலை சுற்று வட்டத்தில் இவ்வாறு சுட்டுக்கொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட உணர்வாளர்களின் பங்களிப்புடன் அமைதியான முறையில் விளக்கேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 5 மாணவர்கள் உள்ளடங்களாக 7 மாணவர்கள் சுடப்பட்டு 5 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், இரண்டு மாணவர்கள் உயிர் தப்பியிருந்தனர். அன்றைய நாள் திருகோணமலை மண்ணில் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு உயிரிழந்த 5 மாணவர்களும் 2005 ஆம் ஆண்டு உயர்தரத்தில் பரீட்சை எழுதி பெறுபேறுக்காகக் காத்திருந்த வேளையில் திருகோணமலை நகரை அண்டிய கடற்கரைக்கு முன்னால் இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு மனிதாபிமானமற்று படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களால் வழக்கு தொடரப்பட்டு சந்தேகத்தின் பேரில் இலங்கை பாதுகாப்புப்படையின் படை வீரர்கள் கைது செய்யப்பட்டு போதிய சாட்சியங்கள் இல்லை என விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான வைத்தியர் மனோகரன் என்பவரால் ஐக்கிய நாடுகள் சபை வரை இந்த விடயம் கொண்டு செல்லப்பட்ட போதிலும் 16 வருடங்கள் கடந்த நிலையில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கான சரியான நீதி கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்குப் பலரும் பாராட்டு








வவுனியா வைத்தியசாலையின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாகப் பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலே பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், புதிய ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்துவ செயற்பாடு காரணமாக நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் அசௌகரியங்கள் இன்றி தங்களுக்கான மருத்துவதேவைகளைவிரைவாகப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக உள்ளது.

குறிப்பாக வவுனியா வைத்தியசாலையில் காணப்படும் 15 நோயாளர் விடுதிகளில் இதுவரை கால மும் காணப்பட்ட கட்டில்கள் மாற்றப்பட்டு நவீன தரத்திலான கட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இதன் தொடர் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தனியார் வைத்தியசாலையைப் போன்ற நவீன மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் நோயாளர்கள் தங்களுக்குரிய மருத்துவ உதவிகள் என்பவற்றை மிக விரைவாகப் பெறுவதற்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டுள்ளது.

வைத்தியசாலை முகப்பு வாயிலின் ஊடாக அவசர சிகிச்சைக்காக, நோயாளர்கள் மற்றும் அம்புலன்ஸ் மட்டும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலை பணியாளர்கள், வைத்தியர்கள், வைத்திய நிபுணர்களுக்கு அவசர சிகிச்சை பிரிவு அமைந்துள்ளமைக்கு அருகில் உள்ள வாயிலை பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்கு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் முன்பே வந்து ஓய்வு எடுத்து சீரான முறையில் செல்வதற்கான ஒழுங்கமைப்புக்களும் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் அரசாங்கம் மற்றும் பொது அமைப்புக்கள், தன்னார்வலர்களின் நிதி உதவிகளுடன் இந்த அபிவிருத்திகளை முன்னெடுப்பதுடன், விரைவில் பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. தற்போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் 800 இற்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிவதுடன் இங்கே 15 நோயாளர் விடுதிகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. வவுனியா வைத்தியசாலை தொடர்பாக நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளி கருத்து தெரிவிக்கையில் –

நான் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் கால் வருத்தம் தொடர்பாக வைத்தியசாலைக்கு வந்து நோயாளர் விடுதியில் தற்போது உள்ளேன்.

நான் வரும் போதே மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செல்கிறேன் என யோசித்து கொண்டே இங்கு வந்தேன். ஆனால் இங்கு வந்த போது முன்பிருந்தது போல் இந்த வைத்தியசாலை காணப் படவில்லை. ஏனெனில் முன்பு இங்கு வரும் போது எமது நோய்க்கு மருந்து எடுப்பதற்கு பல மணிநேரம் செல்லும். ஆனால் அது தற்போது இல்லை, அத்துடன் முன்பு நோயாளர் விடுதியில் இருக்க வேண்டும் என்றதுமே எனக்கு நோய் இன்னும் கூடுவது போன்ற உணர்வு இருப்பதுடன் அங்கிருந்து எப்போது வீடுபோவேன் என்றேயோசித்துக் கொண்டு இருப்பேன்.

ஆனால் தற்போது இங்கிருந்து வீட்டுக்குப் போகப்போவதை எண்ணி கவலையாக இருக்கின்றது. ஏனெனில் இங்கு காணப்படும் வசதிகள், சுத்தம் மற்றும் மருத்துவ உதவிகளால் இங்கிருந்து செல்லவே மனம் இல்லை எனத் தெரிவித்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அங்கம் - 241**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**618. போர்காலங்களில் "உதயம்" மாத இதழில் பதிந்த கருத்துக்களா அவை?**

13 வருடங்களாக சவால்கள், எதிர்ப்புகள் மத்தியில் துணிச்சலோடு வெளியிடப்பட்ட கருத்துக்களை உள்வாங்கி, வரலாற்று ஆசிரியர்கள் பேசத் தயங்குகின்ற - பேசுவதற்குரிய - ஆதாரப் புள்ளிகளை முன்வைக்க முடியாத சூழலில், உருவாகும் இடைவெளிகளை நிரப்பக் கூடிய புனைவெழுத்தில் உருவான 'கானல் தேசம்' என்ற நாவலில் அவரது முன்னுரை இது. இதனை அவர் 6 செப்ரெம்பர் 2018இல் பதிந்திருந்தார். அதன் சில பகுதிகளை தருகிறேன்.

"ஆப்பிள் நிலத்தில் விழுவது அதனது காம்பு சூரிய வெப்பத்தில் காய்ந்து விடுவதாலா? காற்று பலமாக வீசியதாலா? புவியீர்ப்பினாலா? அல்லது அப்பிள் மரத்தின் கீழ்நின்ற சிறுவன் அதை உண்பதற்கு விரும்பியதாலா?

இப்படிபழமொன்றுக்குவிழுவதற்குப் பல காரணங்கள் இருக்கும் போது, ஏனைய விடயங்களுக்கு எத்தனை காரணங்கள் இருக்கலாம் என ருஷ்ஷிய எழுத்தாளர் லியோரோல்ஸ்ரோய் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இதை வாசித்தபோது இலங்கையில் தமிழர்கள் போராட்டம் தோற்றதற்கு இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல காரணம் என்ற விசாலமான சிந்தனையில் உருவாகியதே இந்த நாவல். அதே வேளையில் ஈழப் போராட்டத்தை அவதானமாக கவனித்த காலப்பகுதியில், ஆஸ்திரேலியாவில் வெளிவந்த "உதயம்" மாத இதழின் நிருவாக ஆசிரியனாக இருந்தபோது பல சம்பவங்கள் என்னை ஆழமாக பாதித்தன. அதில் முக்கியமானது இலங்கையின் இராணுவத் தளபதி மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலாகும்.



நொயல் நடேசன்

தற்கொலைத் தாக்குதல் என்பது மிகவும் பழமையானது. பழைய வேதாகமத்தில் வெட்டாத மயிரிலிருந்து வலிமை பெற்ற சாம்சன் சிறையிருந்த மண்டபத்தின் தூண்களை உடைத்து, சிறை பிடிக்கப்பட்டிருந்தவர்களையும் பார்வையாளர்களையும் கொன்று, தானும் இறந்தான். பாரதப் போரில் அரனின் களப்பலி நாம் படித்தது. . . . . ஜப்பானியர்களின் கமக்காசியென அழைக்கப்பட்ட குண்டுடன் பாய்ந்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் நடந்து எதிரிகளை நிலைகுலைய வைத்தன. . . . . விடுதலைப் புலிகள் கர்ப்பிணியான பெண்ணைத் தொடர்ச்சியாக இராணுவ மருத்துவமனைக்கு அனுப்பி, பின்னர் இராணுவத் தளபதிக்கு எதிராகத் தற்கொலைக் குண்டுதாரியாகப் பாவித்தது போன்ற அதிர்ச்சியூட்டும் சம்பவங்களை வேறு வரலாறுகளில் நான் படித்திருக்கவில்லை. மனித சமூகத்தில் மட்டுமல்ல, மிருகங்கள் மத்தியிலும் நம்மால் பேசப்படும் தாய்மை என்ற கருத்தாக்கத்தை அத்தகைய செயல் தகர்க்கிறது. இத்தகைய செயலை எப்படிப் புரிந்து கொள்வது? தமிழ் மக்களின் சொத்துக்கள், உடமைகள் அழிக்கப்பட்டமை பலருக்கும் தெரியும். ஆனால் தென்பகுதியில் ஓர் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்த வீடு பாதுகாப்பு படையினரால் தரைமட்டமாக்கப்பட்டது மற்றைய ஒரு செய்தி. . . . .

83 ஜூலையின் பின்பு தமிழர்கள் ஆயுதப் போரை நோக்கித் தள்ளப்பட்டார்கள் என நினைத்தவர்களில் நானும் ஒருவன். தமிழர்கள் மிகவும் இலகுவாக அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்ளக் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களை விடுதலைப் புலிகள் நிராகரித்தமையுடன் பல முக்கிய அரசியல், சமூகத் தலைவர்களையும் கொன்றமையால் போராட்டத்தை ஆதரித்த என் போன்றவர்கள், பிற்காலத்தில் இலங்கை அரசாங்கத்தை விட, தமிழ் மக்களின் எதிரிகள் விடுதலைப்புலிகள்தான் என்றநிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருந்தது." - என்று பதிந்திருந்தார்.

**619. அப்படியானால், போர்க் காலத்தில் எடுக்கப்பட்ட முன்னெடுப்பு அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகவும்தான் இருந்ததா?**

நடேசனது மாத்திரமல்ல, அவருடன் பிரதிநிதிகளாகச் சென்ற பலரது கருத்துக்கள் அடங்கியிருந்தன. அதில் தரப்பட்ட சமர்ப்பணங்களைக் குறிப்பிட்டிருந்தேன். மக்களுக்கு ஏற்படக்கூடிய பேரழிவுகளைத் தடுப்பதே முக்கிய குறிக்கோளாக இருந்தது.

நடேசனது, தொடர்ந்த கருத்தை பார்ப்போம்.

"இந்த எண்ணத்திலிருந்து இம்மியளவும் மாறாத வேளையில் எதிர்காலத்தில் இது போன்ற தவறுகள் எமது சந்ததிக்கு நேர்ந்து விடலாகாது என்பதற்காகவே எனது நோக்கத்தை நாவலாக இங்கு பதிவு செய்துள்ளேன். இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து சென்றவர்களின் தவறுகளை மட்டுமல்ல, அயல் நாடான இந்தியாவின் பங்கையும் விவரிக்காமல் இந்தப் போரை பற்றி எழுத முடியாது. போரின் இறுதி காலத்தில் மேற்கு நாடுகள் பலவும் இதில் பங்கு கொண்டன. இந்தப் போரில் முக்கிய பங்கு கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர்களுக்காக இலங்கை அரசோடு போராடியதுடன் மட்டும் நிற்கவில்லை. ஏனைய விடுதலை இயக்கங்களையும் எதிர்த்தும் போராடியது. அத்துடன் உள்நாட்டில் வாழ்ந்த ஏனைய



இராணுவத் தளபதி மீதான தாக்குதலில் சேதமுற்ற அவரின் கார்

இனத்தினரோடும் போராடியது. வெளிநாடுகள் முன்வைத்த தீர்வு யோசனைகளுக்கும் எதிராகவும் போராடியது. ஒரு விதத்தில் பல முனைகளில் போரிட வேண்டிய நிலைமையைத் தங்களுக்கு அவர்கள் உருவாக்கினார்கள். காட்டில் வேட்டையாடும் மிருகங்கள் தமது உணவிற்குஅதிகமாகவேட்டையாடுவது இல்லை. அவை தங்கள் இருப்பை பாதுகாக்கவும் பாலுறவிற்காகவும் மட்டுமே சண்டையில் ஈடுபடும். காட்டிலுள்ள விதிமுறைகள் கூட இந்த போராட்டத்தில் இருக்கவில்லை. எந்த விதமான நியாயங்களோ, அறங்களோ போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கட்டுப்படுத்தவில்லை எனும்கசப்பான உணர்வை அவர்களை ஆதரித்தவர்களாலும் மறுக்கமுடியாது.

அரசியல்வாதிகள் பல தரப்பினரும்



பத்மநாபா

இப்படியான நிலைக்கு மூலகாரணம் என்பது பலருக்கும் புரிந்த உண்மை. இலங்கை அரசாங்கத்தில் இருந்த அரசியல்வாதிகள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திலேயே சுமுகமாக முடிந்திருக்கலாம். ஆனால் அவர்கள் போரை உருவாக்கி, அதை அரசியலாக்கியமை மட்டுமல்ல, வியாபாரமாகவும் மாற்றினார்கள். அதே போன்று தமிழ் அரசியல்வாதிகளும் விளையாட்டுமைதானத்தில் வீரர்களை உற்சாகப்படுத்தும் பார்வையாளர்களாக இயங்கினார்கள். இதனால் இரண்டு பக்கத்திலும் பல்லாயிரக்கணக்கான இளைய தலைமுறையினர் வீணாக உயிரிழந்தார்கள். விதை நெல்லை அவித்து பசி போக்கும் விவசாயிகளின் போக்கை ஒத்தவை இலங்கை அரசியல்வாதிகளின் நடத்தைகள். இந்தப் போரை அரசிற்கோ, எந்த இனத்திற்குமோ பெருமை தரும் போராக நினைவு கூர முடியாது. இங்கு வெற்றியை ஒரு பிரிவும் பெறவில்லை. அழிவு மட்டுமே நடந்தது.

சிறுவயதில் இருந்து வாழ்க்கையின் பெருமளவு காலத்தில் நீடித்த இந்தப் போரையும் அதனது விளைவுகளையும் அவதானித்து வந்துள்ளேன். போரைத்தணிக்கவும் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதிலும் என்னால் முடிந்த வரை எனது சக்திக்குட்பட்ட வாறு முயற்சி செய்திருக்கின்றேன்.

போர் முடிந்தாலும் இன்னமும் பூரண அமைதி ஏற்படாத காலத்தில் இந்த நாவல் வெளிவருகின்ற போதிலும், பொதுவாக எழுபதுகளில் இருந்து போராட்டத்தில் ஈடுபட வந்து பின்னர் விடுதலைப் புலிகளால் கொலைசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும் (இதில் பலர் எனது நண்பர்கள்) - பிரதானமாகநான் மிகவும் நேசித்த பத்மநாபாவுக்கும் - இந்த நாவலைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஏதோ சிறிய ஆறுதலை அடைய முடியும் என நினைக்கிறேன். மத நம்பிக்கையுள்ளவன் தனது பெற்றோரது அஸ்தியைக் கரைக்கும் போது ஏற்படும் உணர்வுடன் இந்த நாவலைப் படைத்தேன் என்றால் அது மிகையான கூற்றல்ல. இந்த நாவலின் நோக்கம் பழையவற்றைக் கிளறுவதல்ல. புதியவற்றை மாற்றாக வைப்பதற்கே." - என்று தனது முன்னுரையை முடித்தார் நொயல் நடேசன்.

(வளரும்....)

# எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்கும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்குக் கிடையாது!

## கே.டி லால்காந்த திட்டவட்டம்

எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்கும் எண்ணம் தேசிய மக்கள் சக்திக்கு இல்லை என மக்கள் விடுதலை முன்னணி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேரணியின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி லால்காந்த இதனைத் தெரிவித்தார்.

மற்ற அரசியல் கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை இல்லாதுபோயுள்ள நிலையில் அனைவரும் கூட்டணிக்காகத் தேசிய மக்கள் சக்தியை நாடுகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

எனவே, அதே அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தால் மக்கள் இங்கிருந்தும் விலகிச் செல்வார்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, தேசிய மக்கள் கட்சி எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்காது என குறிப்பிட்ட கே.டி லால்காந்த, முற்போக்கான உறுப்பினர்கள் கட்சியில் இணையலாம் எனக் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் ஊழலுக்கும் மோசடிக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் அரசாங்கம் நாட்டுக்குத் தேவை என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர் எனவும் கே.டி லால்காந்த தெரிவித்தார்.



# 90 கோடி டொலர் உதவி இந்தியா பச்சைக் கொடி!



இந்தியாவிடமிருந்து 90 கோடி டொலர் பெறுமதியான நிதி உதவி இம்மாதம் இலங்கைக்கு கிடைக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் 40 கோடி டொலரும் எரிபொருளுக்காக 50 கோடி கடனுதவியும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரு நிதியுதவி திட்டங்களில் ஒன்று ஜனவரி 10 ஆம் திகதி கிடைக்கப்பெறும் என உயர்மட்ட தகவல்களை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் உதய கம்மன்பில கடந்த வாரம் இலங்கையும் இந்தியாவும் இணைந்து எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதாக அறிவித்திருந்த அதேவேளை, லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் தாங்கிகளின் குத்தகை மேலும் 50 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

40 கோடி டொலர் நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தை தவிர, எரிபொருளுக்காக 50 கோடி டொலர் கடன் வரியையும், உணவு மற்றும் மருத்துவக் கொள்வனவுகளுக்காக 100 கோடி டொலர் கடனையும் இலங்கை நாடியது.

இந்த நிலையில், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனவரி 10 ஆம் திகதி இந்தியாவிற்கு தனது இரண்டாவது உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சரியான தீர்மானம் எடுக்கத் தவறியமையே நெருக்கடிகளை எதிர்கொள்ளக் காரணம்

## சுசில் பிரேமஜயந்த சாடல்

அவசியமான நேரத்தில் சரியான தீர்மானம் எடுக்காது தவறவிட்டமையே நாடு நெருக்கடிக்குள் சிக்கக் காரணம் என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நெருக்கடியான நிலைமைகளில் எடுக்க கூடாத தீர்மானங்களை எடுப்பதும் அநாவசியமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது போன்ற செயற்பாடுகளே இன்று நாடு நெருக்கடியில் சிக்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தரப்பில் இருந்தாலும் அதன் செயற்பாடுகளில் திருப்தியில்லை என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளதாக தெரிவித்த அவர், ஒரு சிலர் எடுக்கும் தவறான தீர்மானங்களே இதற்குக் காரணம் என்றும் குற்றம் சாட்டினார்.

குறிப்பாக அரசாங்கத்தில் இருந்தாலும் தீர்மானம் எடுக்கும் இடத்தில் தாம் இல்லை என்றும் தவறான கொள்கைகளை உருவாக்கி அதற்கு ஏற்றால் போல் முட்டாள்தனமாக தீர்மானங்களை எடுத்தவர்கள் மக்களுக்கு பதில் கூறியாக வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



ஆகவே, தீர்மானங்களை எடுப்பதால் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியாது எனக் குறிப்பிட்ட சுசில் பிரேமஜயந்த, அரசாங்கத்தில் தீர்மானம் எடுக்கும் நபர்களை மாற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது எனக் கூறினார்.

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது

## எரிசக்தி அமைச்சு

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டாலும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நாளாந்தம் 6 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கின்றது.

டொலர் நெருக்கடி காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் செய்ய முடியாமல் கடந்த நவம்பர் 15 ஆம் திகதி மூடப்பட்டு 22 நாட்களுக்குப் பின்னர் டிசெம்பர் 7 ஆம் திகதி திறக்கப்பட்டது.

இன்று மூடப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இம்மாத இறுதிக்குள் மீண்டும் திறக்கப்பட முடியும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதேவேளை, சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஏற்றிச்செல்லும் இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

அதன் எரிபொருளை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

### இலங்கை துணைத் தூதரகத்துக்கு

# சிட்னியிலும் தற்காலிகமான மூடுவிழா!

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக சிட்னியில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சிட்னியில் உள்ள இலங்கை துணைத்தூதரகத்தின் அலுவலகம் மற்றும் அலுவலக வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்கள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தூதரகம் மூடப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

அலுவலக வளாகத்தை சுத்தம் செய்து வருவதால், அலுவலக ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிக்கமாட்டார்களென்றும் இதன் காரணமாக 5 ஆம் திகதி வரை அலுவலகம் பார்வையாளர்களுக்காக மூடப்படும் என்று சிட்னியில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எனவே, அனைத்து பார்வையாளர்களும் ஜனவரி 6 ஆம் திகதி முதல் வருகை தரும் முன்னர் தூதரகத்துக்கு அழைப்பை ஏற்படுத்து மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சியில் மாவட்ட வைத்தியசாலை மருத்துவ குழுவினர் வீடுகளுக்குச்சென்று தேவைகளை பூர்த்திசெய்யும் செயற்பாடு!

கிளிநொச்சி, ஜன. 04

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவ குழுவினர் 2022 ஆம் ஆண்டு தை 01 ஆம் திகதி முதல் நாட்பட்ட நோயாளர்கள் மற்றும் படுக்கை நோயில் உள்ளோருக்கான மருத்துவ தேவைகளை அவரவர் வீடுகளுக்கு சென்று தேவைகளை பூர்த்தி செய்யும்விசேடவேலைத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சேவையை பெற்றுக்கொள்ள விரும்புவோர் 0212283037 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன் தெரிவித்துள்ளார்.

குறித்த நடமாடும் வைத்திய சேவை கீழ்வரும் 24 கிராமங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அமைவாக, பொன்நகர், பாரதிபுரம், மலையாளபுரம், விவேகாநந்தா நகர், கிருஸ்ணபுரம், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, அம்பாள்குளம், ஆனந்தபுரம், தொண்டமான் நகர், கனகாம்பிகைகுளம், அம்பாள நகர், திருவையாறு, திருவையாறு மேற்கு, இரத்தினபுரம், கிளிநொச்சி நகர், மருதநகர், பன்னங்கண்டி, கனகபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம், ஜெயந்திநகர், பெரிய பரந்தன் பகுதிகளில் குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சேவையை பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற் குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என கிளிநொச்சி வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் சேவையை செல்வபுரம், இந்துபுரம், வசந்தநகர், முறிகண்டி ஆகிய முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களுக்கும் விஸ்தரிக்குமாறும், அந்தப் பகுதி மக்கள் கிளிநொச்சி வைத்தியசாலையிலேயே வைத்திய தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர் எனவும், மாங்குளம் ஆதார வைத்தியசாலை 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ளதால் 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி வைத்தியசாலையின் சேவையை தமக்கும் வழங்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு. போக்குவரத்துச் சபையின் ஊழியர் கவனவீர்ப்புப் போராட்டம்



இலங்கை போக்குவரத்து மட்டக்களப்பு பஸ் சாலை சாரதி, நடத்துநர்கள் அதிகாலையிலேயே கொட்டும் மழையில் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது முகாமையாளரை உடனடியாக இடம் மாற்றக் கோரியும் புதியதொரு முகாமையாளரைத் தங்களுக்கு நியமித்து தரும்படி கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர் .

இந்த முகாமையாளரால் கடந்த காலங்களில் அதிக அளவிலான பாதிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அவர் சாரதி, நடத்துநர்களுக்கு இடையே முறுகல்நிலையை ஏற்படுத்தி வருகிறார் எனவும்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டவர்கள்தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக குறித்தமுகாமையாளர்தொடர்பாகபலஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருந்தபோதிலும் எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையில் மீண்டும் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை வீதியில் இறங்கி போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி முகாமையாளர் தொடர்பாகப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருக்குத் தெரிவித்திருந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்த உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு ஒரு தீர்வு கிடைக்காத பட்சத்தில் இன்று உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட உள்ளனர் எனப் போராட்டக்காரர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் ஒரேநாளில் 17 பேர் பரிதாப மரணம்!

நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவான வீதி விபத்துக்கள் உட்பட பல்வேறு சம்பவங்களில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவற்றில் 14 பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழந்தவர்களாவர்.

கொழும்பு, கறுவாத்தோட்டம், மாலபே, பண் டாரகம, வரகாபொல, நிவித்திகல, கல்கமுவ, பதுளை, அக்கரைப்பற்று, ஓபாத, வெலிஓயா, ஹன் வெல்ல, அக்குரஸ்ஸ மற்றும் அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதனிடையே பதவிய மற்றும் வாரியபொல ஆகிய இடங்களில் இரண்டு கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும், எலபாத்த பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 69 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உயர்தரப் பெறுபேறு மீளாய்வில் 'சி' சித்தி 'ஏ' சித்தியாக மாற்றம்!

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் மீளாய்வின் பின்னர் அண்மையில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

இதன் போது கணித பாடத்தில் 'சி' சித்தி பெற்றுக்கொண்டிருந்த மாணவர் ஒருவரின் பெறுபேறு 'ஏ' சித்தியாக மாற்றம் பெற்றுள்ளது. கண்டி தர்மராஜ கல்லூரியைச் சேர்ந்த ருசிர திசங்க அபேவர்தன என்ற மாணவனின் பெறுபேறே இவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது.

கணித பிரிவில் குறித்த மாணவன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். மாணவன் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் 'ஏ' சித்திகளை பெற்றிருந்தார். எனினும் கணித பாடத்தில் இவருக்கு 'சி' சித்தியே கிடைக்கப்பெற்றிருந்தது.

இதன்படி குறித்த மாணவனின் இசட் புள்ளி 2.0084 ஆகவும், மாவட்ட நிலை 68 ஆகவும், தேசிய ரீதியில் 966 ஆம் இடமாகவும் காணப்பட்டது. பரீட்சை பெறுபேறு மீளாய்வு உட்படுத்தப்பட்டதன் பின்னர் கணித பாட பெறுபேறு 'சி'யிலிருந்து 'ஏ' ஆக மாற்றம் பெற்றது.

இதன்படி, மாணவரின் இசட் புள்ளி 2.5538 ஆகவும், மாவட்ட நிலை 12 ஆகவும், அகில இலங்கை நிலை 124 ஆகவும் மாற்றம் பெற்றுள்ளது.

இந்த பரீட்சை பெறுபேறு சமூக ஊடகங்களில் பெரும் பேசுபொருளாக மாற்றம் பெற்றுள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக சுமார் 48 ஆயிரம் மாணவ மாணவியர் விண்ணப்பம் செய்தனர் எனவும் இதில் 329 மாணவ மாணவியரின் பெறுபேறுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேகன தெரிவித்துள்ளார்.

# பணிக்கு திரும்பிய அரச உத்தியோகத்தர்கள் கொழும்பில் கடுமையான வாகன நெரிசல்கள்!



நாடளாவிய ரீதியில் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் பணிக்குத்திரும்பியதையடுத்து, கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

அத்தோடு, பாடசாலைகளும் நேற்று (திங்கட்கிழமை) மீள திறக்கப்பட்டதால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது.

அனைத்து அரச ஊழியர்களும் நேற்று முதல் பணிக்குத் திரும்புவதைக் கட்டாயமாக்க அரசாங்கம் கடந்த வாரம் தீர்மானித்திருந்தது.

அதன்படி, பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அரச ஊழியர்களை நேற்று முதல் பணிக்கு சமுகமளிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தது.

அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் மழை தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு நகரின் பல பகுதிகள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி நீர்பாசன திட்டப்பகுதியில் நேற்று காலை வரையில் அதிககூடிய மழை வீச்சியாக 91 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக மட்டக்களப்பு நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைக் காணமுடிகின்றது.

ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பெய்துவரும் மழை காரணமாக போரதீவுப்பற்று, களுவாஞ்சிகுடி, பட்டிப்பளை,மண்முனைப்பற்று, காத்தான்குடி, மட்டக்களப்பு



மாநகரசபை, ஏறாவூர்ப்பற்று, கிரான், வாகரை பிரதேச செயலாளர் பிரிவுகளில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பல பகுதிகளில் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் வெள்ள நீர் பாயும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

# கொள்ளைச் சந்தேக நபர் ஒருவருக்கு ஏறாவூரில் 14 நாள்கள் விளக்கமறியல்!

வீதியில் சென்ற பெண்களின் தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டவர் எனக் கூறப்படும் நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கு மாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மட்டக்களப்பு,ஏறாவூர்பொலிஸ்பிரிவிலுள்ள ஆறுமுகத்தான்குடியிருப்பு, 10 ஆம் கட்டை வீதி, கொம்மாந்துறை பஸ்தரிப்பு நிலையம் ஆகிய பகுதிகளில் தனியாக வீதியில் சென்ற பெண்களைப் பின் தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருந்த தலா 2 பவுண் நிறை கொண்ட 6 பவுண் தங்கச் சங்கிலிகளை கழுத்தில் இருந்து அறுத் தெடுத்து கொள்ளையிட்டு சென்ற 3 சம் பவங்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் செங்கலடியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அறுந்த தங்கச் சங்கிலி ஒன்றை விற்பதற்கு ஒருவர் சென்றிருந்தார்.

அப்போது அங்கு நின்ற இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவர் அவர் மீது சந்தேகம் கொண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு பொலிஸார் சென்றதை கண்டு நகையை விற்க சென்றவர் தப்பி ஓடிய நிலையில் அவரை இராணுவப் புலனாய்வாளர் துரத்திச் சென்று மடக்கி பிடித்ததையடுத்து பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனவும், இவரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# நாட்டின் அழிவுக்கு பொறுப்பேற்று முழு அரசும் பதவி விலகவேண்டும்




முழு நாட்டுக்கும் செய்த அழிவுக்காக கூட்டாக பொறுப்பேற்று பதவி விலகுமாறு அரசாங்கத்திடம் கோருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தலைவர்கள் வேறு நபர்கள் மீது குற்றங்களை சுமத்தி விட்டு, தாம் தவறு செய்யாதவர்கள் என காண்பிக்க முயற்சித்து வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளிய மைக்கான பொறுப்பை ஒருவர் மாத்திரமல்லர், முழு அரசாங்கமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கெத்தாராம ஸ்ரீ சித்தார்த்த அறநெறி பாடசாலைக் கட்டடத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித்தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

பொய்யான ஆடம்பர வாய்ப் பேச்சு விற்பன்னர்களை வெற்றி பெற செய்த தன் விளைவுகளை நாடு அனுபவித்து வருகிறது எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கை தாமே வடிவமைத்து உருவாக்க வேண்டும்!

## வி.உருத்திரகுமாரன் வலியுறுத்து



தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே வடிவமைத்து, இந்த அரங்கை நோக்கி அனைத்துலக சமூகத்தை இழுக்க வேண்டும் என தனது புத்தாண்டுச் செய்தியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரனது புத்தாண்டு செய்தியின் முழுமையான வடிவம் வருமாறு –

மலர்ந்துள்ள புதிய ஆண்டு தமிழீழத் தேச மக்களுக்கும், தமிழக மற்றும் உலகத்தமிழ் மக்களுக்கும் நல்லாண்டாக அமைய வேண்டும் என வாழ்த்துவதோடு, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் எனது அன்பையும் வெளிப்படுத்திக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

உலகளாவிய ரீதியில் மனித குலத்தை அச்சுறுத்தி வரும் கொவிட் பெருந்தொற்றை எமது மக்கள் தடுப்பூசியைப் பெறுவதன் மூலமும், சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் மிக அவதானமாக எதிர்கொள்ள வேண்டும் என்ற வேண்டுதலையும் இந்தத் தருணத்தில் உங்களிடையே முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்தப் பெருந்தொற்றை வெற்றி கொள்வதற்கு மனிதகுலம் தனது சக்தியையெல்லாம் திரட்டிப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்தப் புதிய ஆண்டு மலர்கிறது.

2021 ஆம் ஆண்டின்போது கொவிட் வைரஸ் கிருமிக்கெதிரான தடுப்பூசி பரவலாக உபயோகத்துக்கு கொண்டு வரப்பட்டதால் அதுவே பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றது. இது எமக்கெல்லாம் பெரு நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

இருப்பினும், உலக நாடுகள் அனைத்திலும் தடுப்பூசி கைக்கெட்டியது சமத்துவமான முறையில் அமையவில்லை என்பதும் பொருளாதார வளம் குறைந்த நாடுகள் பலவற்றிடையே தடுப்பூசி குறைந்த வீதமான மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளது என்பதும் கசப்பான உண்மைகள். உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற மக்களிடையே தடுப்பூசி பயன்பாட்டில் நம்பிக்கையற்ற ஒரு பகுதியினர் தடுப்பூசியைப் பெறுவதில் தயக்கம் காட்டி வருகின்றமையும் பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கு சவாலாக அமைந்திருக்கிறது.

உலக நாடுகள் அனைத்திலும் கொவிட் பெருந்தொற்றை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் சீரான முறையில், சமத்துவமாக அமையும்போதுதான் இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவது சாத்தியப்படும் என்ற புரிந்துணர்வோடு உலகத் தலைவர்கள் 2022 ஆம் ஆண்டில் நடந்துகொள்ள வேண்டும் என்ற செய்தியையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் இந்தத் தருணத்தில் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

கடந்து சென்ற ஆண்டின் போது தமிழீழ தேசியப் பிரச்சினை மேலும் கூர்மையடையாவிடினும் அது அனைத்துலகப் பரிமாணம் கொண்டதோர் பிரச்சினையாக நீடித்து வருகிறது. இதற்குப் புலம் பெயர் தமிழ் மக்களின் பல்வேறு அரசியல் செயற்பாடுகளும் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

தாயகத்திலும் தமிழ் மக்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்தி வருகிறார்கள். 2021 இல் நிகழ்த்தப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி வரை எனும் போராட்டம் எமது மக்கள் தமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்தியதற்கு நல்லதோர் உதாரணமாக அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டில் தாயகத் தமிழ்த் தலைவர்கள் 13 ஆம் திருத்தச்சட்டத்தைச் சுற்றித் தமது அரசியலைச் செய்து கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக 13 ஆம் திருத்தச் சட்டம் அமையாது எனவும், எனினும் நடைமுறையில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தின் கீழ் அமைந்த மாகாண சபைகளை இல்லாதொழிக்கும் முயற்சியை இலங்கை அரசு எடுக்குமானால் அதனை எதிர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை பல தாயகத் தமிழ் அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளனர் எனவும் அறிய முடிகிறது.

ஆனால், இந்த அரசியல் கதையாடல் நடைபெறும் முறை, குறிப்பிட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த மாகாண சபைகள் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடிச்சுப்போடும் முயற்சிக்குத் துணைபோவதாக அமைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுவததைத் தவிர்க்க முடியவில்லை.

இதனால், 2022 ஆம் ஆண்டின்போது இந்த விடயத்தை அணுகுவதற்குத் துணை செய்யும் வகையில் தமிழர் தேசத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்த வருடபுதுவருடச்செய்தியில்பதிவுசெய்யவிரும்புகிறேன்.

ஏற்கெனவே உள்ளூராட்சி மட்டத்தில் மாநகர சபைகள் இருப்பதுபோல், நகராட்சி மன்றங்கள் இருப்பதுபோல், கிராமசபைகள் இருப்பதுபோல் நாடு தழுவிய ரீதியில் அமைந்த அதிகாரப்பரவலாக்கலின் ஓரம்சமாக மாகாண சபைகள் இருப்பது வேறு. ஆனால் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபைகள் அமையும் என நம்புவதோ அல்லது பேசுவதோ வேறு.

மேலும் 13 ஆம் திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் ஒரே அலகாக இருக்க வேண்டுமென உறுதி செய்யவில்லை.

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைவதில் மாகாண சபைகள் ஏற்கனவே தோல்வி கண்டு விட்டன. மாகாண சபைகளைச் செத்த பிணம் என்று தாயகத் தமிழ்த் தலைவர் ஒருவர் வர்ணித்ததுமுண்டு.

மாகாண சபைகளை தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுடன் எவரும் முடிச்சுப் போடுவதைத் தாயகத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிக்க வேண்டும்.

இந்திய அரசுடன் உரையாடும்போது மாகாண சபைகளைத் தோல்வியடைய வைத்ததில் சிங்கள இனவாதத்தினதும், பேரினவாத மயப்படுத்தப்பட்ட இலங்கை அரசினதும் பங்கைச் சுட்டிக்காட்டி வாதிட்டு அடுத்த கட்ட ஏற்பாடு குறித்துப் பேச வேண்டும்.

இந்தியச் சூழலும், இலங்கைச் சூழலும் மாறுபட்டவை. இந்தியாவில் பல்வேறு மொழி பேசும் மாநிலங்கள் உள்ள சூழலில் ஒன்றிய அரசுக்கும், மாநிலங்களுக்கும் ஒரு வகையான அதிகார இழுபறிச்சமநிலையும் , சமரசநிலைக்கான வாய்ப்பும் உள்ளது.

இலங்கையின் இரு மொழிச் சூழலில் தமிழ் மொழியும், அம் மொழியைப் பேசும் மக்களும் சிங்கள அரசால் இனவழிப்புக்குள்ளாக்கப்படும் சூழல் நிலவுகிறது.

இந்தச் சூழலில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். இதற்கு உதவக்கூடிய வகையில், தமிழ் மக்கள் வசம் தனித்துவமாக அதிகாரங்கள் உள்ள அரசியல் ஏற்பாடு ஒன்றே தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும்.

மாகாண சபைகள் போன்று நாடு தழுவிய பொது ஏற்பாடுகள் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு போதும் அமைய முடியாது. 13 ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் அமைந்த மாகாண சபைகளின் தோல்விக்கு இதுவொரு முக்கிய காரணமாகும்.

இலங்கை அரச கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்குத் தேவையான தனித்துவமான அதிகாரங்கள் கொண்ட ஒரு தீர்வு முறையை எட்ட முடியாது. இதனால்தான் தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைச் சுதந்திரமும், இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசாக தமிழ் மக்கள் அடையாளம் கண்டார்கள்.

மாவீரர்களின் ஈகத்தினாலும், குருதியினாலுமே தமிழ் மக்களின் இலட்சிய தாகம் வலுப்பெற்றது. இந்தத் தீர்வு சாத்தியமில்லையெனக் கூறுபவர்களோ அல்லது தாயகச்சூழலில் தமிழீழம் பற்றிப் பேசமுடியாத நிலையால் வேறு தீர்வுகள் பற்றிப் பேசுபவர்களோ தமிழ் மக்கள் மீதான சிங்களத்தின் இனவழிப்பைத் தடுக்கக் கூடிய தீர்வுமுறைகளைத் தமக்குள்ள வரையறைகளுக்குள் பேச முடியும். பேச வேண்டும்.

இவ்வாறு பேசும்போது, தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே வடிவமைக்க முடியும். நாம் இந்த அரங்கை நோக்கி அனைத்துலக சமூகத்தை இழுக்க வேண்டும்.

ஆனால் இப்போது நடப்பதைப் பார்த்தால் நமது தாயக அரசியற் தலைவர்கள் பலர் தெரிந்தோ தெரியாமலோ ஏனைய சக்திகள் போடும் அரசியல் அரங்கத்தில் ஏறி நின்று ஆடுவது போல் தெரிகிறது.

இது தமிழீழ மக்களுக்குப் பயன்தரும் செயலாக அமையாது. ஏனையோருக்குச் சேவைசெய்யும் செயலாக மட்டும் அமைந்து விடும் ஆபத்தைக் கொண்டது என்பதையும் எமது தலைவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டில் நாம் தமிழீழ தேச நிர்மாணத்தை மேலும் வலுப்படுத்தி வளம்படுத்த வேண்டும். தமிழர் தேசத்தை வலுப்படுத்தி வளம்படுத்தல் என்ற சிந்தனையுடன் நமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

தாயக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தி, சிங்களத்தின் தாயகக் கபளீகரத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழ் மொழியின் சிறப்பை நிலைநிறுத்தி, தாயக மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வைப் பலப்படுத்தி, சமூக நீதியைக் கொண்டாடும் மக்களாக, மாவீரர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நாம் நமது தேசத்தை நிர்மாணம் செய்ய வேண்டும்.

சாதி, சமூக, பிரதேச, பாலின, பொருளாதார வேறுபாடுகளால் கூறு போடப்பட்ட மக்களாக இல்லாது தமிழீழ தேச மக்கள் நாம் எனத் தலை நிமிர்ந்து நிற்கும் வகையில் நமது தேச நிர்மாணம் அமைய வேண்டும்.

இதற்குத் தமிழ்த் தேசியம் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். குறுந்தேசியவாதமாக அல்லாது அனைத்து மக்களையும் சமத்துவமாக மதிக்கும் பண்பு கொண்டதாக அமைய வேண்டும். புதிய உலகச்சூழலுக்கமையத் தன்னை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்குத் தாயகத்திலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள், தமிழக மக்கள், உலகத் தமிழ் மக்கள் இணைந்து அடம்பன் கொடி திரள்வதுபோல அணி திரள வேண்டும். பெண்களதும் இளையோர்களதும் பங்கு சமூகத்தில் அதிகரிக்கப்பட வேண்டும். மலர்ந்துள்ள புதிய ஆண்டில் இத்தடத்தில் தமிழ்த் தேசியம் வலுப்பெறும் வகையில் நமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வோம்.

தமிழ் மக்கள் பெருமை மிகுந்த மரபுக்குச் சொந்தக்காரர். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் பரந்த உலகப்பார்வை கொண்டு வாழ்ந்தவர்கள். தமிழ் மக்களின் இந்தச் சிறப்பை நிலைநிறுத்தியவாறு எமது உரிமைகளை வென்றெடுத்து தமிழீழத் தனியரசை அமைப்பதற்கு அயராது உழைப்போம் என புத்தாண்டு மலர்ந்துள்ள இந்தத் தருணத்தில் உறுதி எடுத்துக் கொள்வோமாக எனத் தெரிவித்துள்ளார்.

# சிட்னியில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார் இலங்கையர்



ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வசிக்கும் திமோத்தி சென்ன் ஜெபசீலன் வித்தியாசமான கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார்.

இலங்கையரான ஜெபசீலன், கிரிக்கட் பிடியெடிப்பு தொடர்பில் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

மிகவும் உயரமான பிடியெடுப்பினை எடுத்து கின்னஸ் உலக சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. 113.86 மீற்றர் அல்லது 393 அடி 2.897 அங்குலம் உயரத்துக்கு சென்ற பந்தைப் பிடித்து இந்த சாதனை நிலைநாட்டியுள்ளார்.

கின்னஸ் உலக சாதனையாளராக மாறவேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்து வந்த ஜெபசீலன், இந்த சாதனையை நிலைநாட்டி தனது கனவை மெய்ப்பித்துக் கொண்டுள்ளார்.

ஜெபசீலன், அறக்கட்டளை மூலம் இலங்கையில் ஆதரவற்றவர்களுக்கு தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நிலைநாட்டப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் ஜெபசீலனின் சாதனை பற்றிய விவரங்கள் உள்ளபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## மருத்துவக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டப்பணத்தைக் கட்டத் தவறின் ஒரு மாதம் சிறைத் தண்டனை என்றும் மன்று தீர்ப்பளித்துள்ளது.

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்று, மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை, யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் அமைந்துள்ள காணியில் கொட்டி, எரியூட்டிய நிலையில் அயலவர்களால் யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு மாநகர சபை உறுப்பினர்கள், சுகாதாரப் பிரிவினர்கள் ஆகியோர் விரைந்து சென்று நடவடிக்கை எடுத்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தனியார் வைத்தியசாலை உரிமையாளருக்கு எதிராக, யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியால், யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்நிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

1. பொதுமக்கள் குடியிருக்கும் பகுதியில் தொற்றுநோயைப் பரப்பும் வகையில் நோயாளிக்குப் பாவித்த மருந்துப் போத்தல்களை வீசியமை.

2. தொற்றுநோயைப் பரப்பும் வகையில் நோயாளிகளினது Toilet pampers வீசியமை.

3. தொற்று நோயை உருவாக்கும் வகையில் நோயாளிக்குப் பாவித்த ஊசிகளை வீசியமை.

4. தொற்று நோயை உருவாக்கும் வகையில் நோயாளிக்குப் பாவித்த சேலைன் போத்தல்களை வீசியமை.

5. தொற்று நோயை உருவாக்கும் வகையில் நோயாளிக்குப் பாவித்த இரத்தப் பரிசோதனை குப்பிகளை வீசியமை.

6. சத்திர சிகிச்சைக் கையுறை மற்றும் அங்கிகளை வீசியமை.

7. தொற்று நோயைப் பரப்பும் வகையில் றெஜிபோம் மற்றும் படுக்கை மெத்தைகளை வீசியமை.

-ஆகிய 7 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் வைத்தியசாலை உரிமையாளர் ஏற்றுக் கொண்டதையடுத்து, உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்த மன்று, ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா 10ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபாய் தண்டப் பணத்தை விதித்தது.

தண்டப் பணத்தைக் கட்டத்தவறின் ஒரு மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப் பட்டது.

## யாழ். போதனா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்றார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்த்தனா இந்த நியமனத்தை நேற்று வழங்கியுள்ளார்.

## யாழ். வளைவுக்கு ...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக வந்த மோட்டார் சைக்கிள், யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் ஏற முற்பட்டபோது , யாழில் இருந்து வந்த டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் செலுத்துநர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### வீரமும் தியாகமும் நிறைந்த வல்வெட்டித்துறை மண்ணில்

# இனப்படுகொலை அரசின் பிரதிநிதிகள் பட்டத் திருவிழாவுக்கு விருந்தினர்களா?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போர்க்கொடி

இனப்படுகொலை அரசின் பிரதிநிதிகளை பட்டத்திருவிழாவுக்கு விருந்தினர்களாக அழைக்கும் முயற்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் நேற்றுவெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

வல்வெட்டித்துறை மண்ணில் இது வரை காலமும் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் பட்டத்திருவிழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்திருந்தது. ஆனால், வழமைக்கு மாறாக, இவ் வருடம் தமிழின விரோத சக்திகளின் வழிநடத்தலில், தமிழினத்தின் வாழ்வுரிமையைச் சிதைத்த, இனவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்கி, அவர்களின் பங்குபற்றலுடன் இவ்விழாவை நடத்த முற்பட்டுள்ள அரச முகவர்களின் சதிமுயற்சிக்குள், ஏற்பாட்டுக் குழுவினரைச் சிக்க வைத்துள்ள இந்தச் செயற்பாடானது தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர்முயற்சியாகும்.

இவ்வாறு தமிழினப் பண்பாட்டு அழிப்பின் தொடர் முயற்சியின் அங்கமாக, இப் பட்டத்திருவிழா நிகழ்வு நடை பெறுமாயின், தமிழின வரலாற்றின் கறைபடிந்த நிகழ்வாகவே, எதிர்வரும் காலங்களில் இந்நிகழ்வு வரலாற்றில் பதியப்படும்.

தமிழர் வரலாற்றில் பின்னிப்பிணைந்த பாரம்பரிய நிகழ்வான பட்டத்திருவிழாவில், இவ்வாறான கறைபடிந்த வரலாற்றுத் தவறை மேற்கொள்ளத் துணைபோக வேண்டாம் என விழாவின் ஏற்பாட்டாளர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டி நிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை, இனப்படுகொலையாக விஸ்வரூபம் எடுத்தபோது, சிங்கள - தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்பாடுகள் முற்றியது. ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கியமாக வாழமுடியாத நெருக்கடி நிலை தோன்றியபோது, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் சுதந்திரப் போராட்டம் உதித்த மண்ணில் நடக்கக் கூடிய ஒரு நிகழ்வுக்கு, தமிழினவழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்க முற்படும் பேரினவாத முகவர்களின் திட்டமிட்ட சதிவலைக்குள் சிக்காது, ஏற்பாட்டாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

சர்வதேச அரங்கிலுள்ள, தமிழ் மக்களுக்கான பொறுப்புக் கூறல் விடயங்களை, இலங்கை அரசு முற்றுமுழுதாகப் புறக்கணித்தே வருகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் இன்றும் வீதிகளில் நின்று, நீதிவேண்டிப் போராடிவருகிறார்கள்.

தமிழர் தாயகம் மீது, திட்டமிட்டு சிங்கள மயமாக்கல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடரும் சூழ்நிலையில், தமிழின அழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக அழைப்பதென்பதும், அதற்கு ஏற்பாட்டாளர்கள் தன்னிலை விளக்கம் கொடுப்பதென்பதும் ஒருபோதும் நியாயப்படுத்த முடியாத மிக மோசமான செயற்பாடாகவே அமையும்.

வீரமும், தியாகமும், அளப்பரிய அர்ப்பணிப்புக்களும் நிறைந்த தமிழ் மண்ணில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, ஒரு உன்னதமான தேசிய விடுதலைப் போராட்டம் உதித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மண்ணில், அற்ப நலன்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் வரலாற்றில் என்றுமே மன்னிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்த விரும்புகின்றது.

எனவே, குறித்த பட்டத்திருவிழாவுக்கு இலங்கை இனப்படுகொலை அரசின் பங்காளிகளையும், அவர்களுக்குத் துணை நின்றவர்களையும், விருந்தினர்களாக அழைக்கும் முடிவை ஏற்பாட்டாளர்கள் உடன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## முதலை தாக்கியதில் சுழியோடி உயிரிழப்பு

*தெஹிவளை கடலில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*58 வயதான சுழியோடியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*தெஹிவளை கடற்பகுதியில் நீராடிக் கொண்டிருந்தபோது அவரை முதலை தாக்கியுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*படுகாயமடைந்த அவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.*

## சமலுக்கு விவசாயத்துறை பதவியேற்க அவர் மறுப்பு

விவசாயத்துறை அமைச்சுப் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஏற்கமறுத்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அமைச்சரவை மறுசீரமைப்பின் போது, விவசாயத்துறை அமைச்சை தனது மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷவுக்கு வழங்க ஜனாதிபதி உத்தேசித்திருந்தார்.

'உழவு இலங்கை பயிர் செய்கை போர்' திட்டத்தை அவரின் தலைமையில் செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் விவசாயத்துறை அமைச்சை ஏற்க சமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

விவசாயத்துறை அமைச்சராக செயற்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டத் திருவிழாவை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின்றி உடனடியாக ஒத்திவைக்கவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலே வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா தொடர்பாக கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா ஏற்பாட்டாளர்களுடன் நான் தொடர்பு கொண்டு தற்போதைய சூழ்நிலையில் நடத்த வேண்டாம் எனக் கூறியுள்ளேன். அதனையும் மீறி நிகழ்வை நடத்த முற்படுவார்களாக இருந்தால் வல்வெட்டித்துறை நகர சபை இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளோம்.

அவர்களுக்கு நாங்கள் பக்கபலமாக இருப்பதுடன் தேவைப்பட்டால் நீதிமன்றம் மூலமாக இதனைத் தடுக்க முற்படுவோம் - என்றார்.

## இரு பிள்ளைகளை நிர்வாணமாக்கி துன்புறுத்திய கொடூர தந்தை கைது

ஹற்றன் - குடாகம சமகி மாவத்தை பிரதேசத்தில் பிள்ளைகள் இருவரை துன்புறுத்திய குற்றச்சாட்டில், குறித்த பிள்ளைகளின் தந்தை ஹற்றன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூத்த பெண் பிள்ளைக்கு 11 வயதாகும் நிலையில் மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் 8 மற்றும் 7 வயது சிறுமிகளாவர். அதேபோல் ஆண் பிள்ளைக்கு 6 வயது ஆகும்.

6 வயதுடைய சிறுவனும், அச்சிறுவனின் அக்காவான 7 வயது சிறுமியுமே இவ்வாறு அவர்களது தந்தையால் துன் புறுத்தப்பட்டுள்ளதுடன், இதன் போது அவர்களது தாயும் அருகிலிருந்துள்ளார்.

அந்தச் சிறுவர்களை நிர்வாணமாக்கி, அவர்களது முகத்திலும் உடலிலும் மிளகாய்த்தூளைப் பூசி, அவர்களது வீட்டுக்கு முன்பாகவுள்ள மரத்தில் கட்டி வைத்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைகள் அழுவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல் அயலவர்கள் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

மதுபோதையில் இருந்த குறித்த நபர் தனது மனைவி மற்றும் குழந்தைகளைப் பலமுறை தாக்கினார் எனவும், தனது மனைவியைத் தாக்கியதில் அவரின் கை முறிந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுவர்கள் இருவரும் விறகுக் கட்டு ஒன்றைத் திருடினர் எனவும், அதற்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது எனவும் குறித்த சிறுவர்களின் தந்தை பொலிஸில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு துன்புறுத்தல்களுக்குள்ளான சிறுவர்கள் இருவரும் சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வும்ஹற்றன்பொலிஸார்தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இயலாமையை மூடி மறைக்க முயற்சிக்கின்றது அரசாங்கம்!

## ரில்வின் சில்வா சாடல்



அரசாங்கம் தனது இயலாமையை மூடி மறைப்பதற்காக அமைச்சரவையில் மாற்றங்களை செய்யத் தயாராகி வருகிறது என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்ய உள்ளதாக வெளியாகி இருக்கும் தகவல்கள் தொடர்பாக பெலவத்தையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களை மாற்றுவதால், வீழ்ந்து போயுள்ள நாட்டை தற்போதைய அரசாங்கத்தால், கட்டியெழுப்ப முடியாது. நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் திருடர்கள் அனைவரையும் விரட்டியடித்து விட்டு, மக்கள் சார்பான அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.

நாட்டுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பெரிய மாற்றம் தேவைப்படுகிறது. தோல்வியான ஆட்சியாளர்களிடம் இருந்து மக்கள் விடுபட வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி, நாட்டை கட்டியெழுப்புவதற்காக தெளிவான வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது.

மக்கள் வரிசைகளில் நிற்கும் காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, எதிர்கால சந்ததியினர் அனர்த்தத்துக்குள் செல்ல இடமளிக்காத அரசாங்கம் ஒன்றின் ஆட்சியை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடாளுமன்றத்தை மூடாமல் கூட்டத் தொடரை நடத்துவதே அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வெளிநாட்டிலிருந்து காதலிகளுடன் வந்த இளைஞர்கள் கடலில் மூழ்கி பரிதாப சாவு!

புத்தாண்டு கொண்டாடுவதற்காக வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்த இளைஞர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கடந்த 31ஆம் திகதி ஹிக்கடுவ, நாரிகம கடற்கரையில் குளிப்பதற்காக சென்ற ரஷ்ய நாட்டவர்கள் இருவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிந்துள்ளனர்.

உயிரிழந்த இருவரும் 33 வயதுடையவர்களாவர். மேற்படி இளைஞர்கள் இருவரும் தங்கள் காதலிகளுடன் இலங்கை வந்துள்ள நிலையில் ஹிக்கடுவ கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த போது அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன் போது கரையில் இருந்த காதலிகள் இருவரும், அங்கிருந்த மக்களின் உதவியுடன் அவர்களை காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டு காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். மறுநாள் காலை மற்ற இளைஞனின் உடலில் கரையொதுங்கியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர்கள்

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் மதுபான போத்தல்களுக்கும் நேற்று (திங்கட்கிழமை) முதல் புதிய பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

குறித்த ஸ்டிக்கர் மதுபான போத்தல்கள் மற்றும் கொள்கலன்களில் ஒட்டப்படும் என்றும் மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே, பழைய மதுபான போத்தல்களை விற்பனை செய்து நிறைவு செய்வதற்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

அதன் பின்னர் விற்பனை செய்யப்படும் சகல மதுபானப் போத்தல்களிலும் புதிய முத்திரைகள் காணப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## மக்கள் பொருளாதார கஷ்டத்தில்:

# 800 பேருக்கு நத்தார் விருந்து கொடுத்த ராஜாங்க அமைச்சர்!

நாட்டு மக்கள் கடும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் சந்தர்ப்பத்தில் சிலாபம் மாரவில பிரதேசத்தில் 800 பேருக்கு ஆடம்பர நத்தார் விருந்து நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆடம்பர நத்தார் விருந்தை ராஜாங்க அமைச்சரான சனத் நிஷாந்த வழங்கியுள்ளார்.

இந்த நத்தார் விருந்துக்கு அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவளித்த 157 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகித்த 53 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் நத்தார் விருந்தை ஏற்பாடு செய்வது சனத் நிஷாந்தவின் திட்டமாக இருந்துள்ளது.

எனினும் ஜனாதிபதியே இந்தத் திட்டத்தை மாற்றியுள்ளார் எனக் கூறப்படுகிறது. இந்த நத்தார் விருந்துக்கு அழைப்பதற்காக சனத் நிஷாந்த, ஜனாதிபதியை தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

அப்போது வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவளித்த 157 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துக்கான அழைப்பை விடுக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதனடிப்படையில், 157 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமின்றி, அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகள், சாரதிகள், மாரவில பகுதியை சூழவுள்ள பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகளுக்கு சனத் நிஷாந்த அழைப்பு விடுத்துள்ளார். இதற்கமைய நத்தார் விருந்தில் 800 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரியவருகிறது.

## திருமலை தம்பலகாமத்தில் எரிவாவு அடுப்பு வெடிப்பு!

திருகோணமலை - தம்பலகாமம், பாலம் போட்டாறு பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இதனால் வீட்டில் உள்ள எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இரவு சாப்பாட்டை சாப்பிடுவதற்காக கறியை சூடாக்கிக் கொண்டிருக்கும் போதே அடுப்பு வெடித்தாகத் தெரிவிக்கின்றனர்.

கறி சுட வைக்கும் போது வித்தியாசமான வாசம் வீசியதாகவும் உடனடியாக சமையல் அறைக்குள் சென்று பார்க்கின்ற போது அடுப்பு வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனைகண்டு உடனடியாக தண்ணீர் ஊற்றி அனைத்ததோடு கொள்கலன் குழாயையும் கழற்றி வீசியதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# சமையல் எரிவாயுப் பிரச்சினையுடன் தொடர்புடையோரை தூக்கிலிடவும்!

## தயாசிறி ஜயசேகர வலியுறுத்து



எரிவாயு பிரச்சினையுடன் தொடர்புடையவர்களை தூக்கிலிட வேண்டுமென இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யத் தவறியதன் விளைவுகளை இன்று மக்கள் எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரசாயன உரத்தால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும் என கூறிய மருத்துவர்கள், தற்பொழுது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொன்னி சம்பாவால் மக்களது சிறுநீரகங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு பற்றியும் பேச வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு எதிராக இதுவரையில் எவரும் கூக்குரல் எழுப்பவில்லை எனவும், எதிர்காலத்திலும் அவ்வாறு நடக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களை நேசிப்பது, உண்மையாக இருந்தால் அவர்களை மக்கள் வெறுக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அகங்காரத்துடன் இருக்கும் போது நிச்சயமாக கூக்குரல் எழுப்பி எதிர்ப்பை வெளியிடுவார்கள் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் சில தவறுகளை இழைத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரப் பிரச்சினையால் அடுத்த ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொன்னி சம்பாவையே நாம் உண்ண நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

உரப்பிரச்சினையால் சிறுநீரகம் பாதிக்கப்படவில்லை, விவசாயிகள் நீர் அருந்துவதில்லை, நாம் பயன்படுத்தும் நீரில் கெடியம் என்னும் உலோகம் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பாகமுவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குபற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு 5.5 மில்லியன் டொலர் உதவி வழங்க முன்வந்தது ரஸ்யா!

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக சுமார் 5.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை ரஸ்யா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பாடசாலை மட்ட போசாக்கு திட்டங்களுக்காக இந்த உதவு தொகை பயன்படுத்தப்பட உள்ளது.

இலங்கையில் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு உதவிகள் வழங்கப்படுகின்றன என ரஸ்ய தூதரகம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்த நிதி, உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2022இல் வெளியிடப்பெற்றது.